DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT,
AMBATTUR
TIRUVALLUR DISTRICT

STC.No.206/2020
Deposition of witness for – Prosecution: Pw1
Defence:

| | |
|---|---|
| பெயர் :தங்கவேல் | |
| த/பெ :கந்தசாமி | மதம் : |
| கிராமம் :அம்பத்தூர் | தொழில் :வியாபாரம் |
| வட்டம் :சென்னை | வயது :67/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of Date
---------------------------------------------------------------------------

தேதி –31.10.2025

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

1. நீதிமன்றத்தில் ஒப்படைத்த ஆவணமானது எதிரியின் பெற்றோருடையதாகும். அந்த இரண்டு ஆவணமும் **(நீ.சா.ஆ.1)** மற்றும் **(நீ.சா.ஆ.2)** ஆக அசலுடன் ஒப்பிட்டு பார்த்து நகல் குறியீடு செய்யப்படுகிறது. அந்த ஆவணத்தை வைத்து ரூ.50,00,000/– எதிரிக்கு கடனாக கொடுத்தேன். அந்த ஆவணத்தை தவிர வேறு ஆவணம் ஏதேனும் வாங்கினேனா என்றால் இல்லை. 28.04.2019 ஆம் தேதி கடன் உறுதி பத்திரம் எதிரி கொடுத்ததாக கூறியிருந்தேன். அந்த கடன் உறுதி பத்திரத்தை எதிரி திருப்பி வாங்கி சென்றார் என்ற விவரத்தை பிரமாண

வாக்குமூலம், வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் புகார் மனுவில் தெரிவித்துள்ளேனா என்றால் இல்லை. 03.02.2020 ல் கொரட்டூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக தெரிவித்திருந்தேன் என்றால் சரிதான். அந்த புகாரானது எதிரி கொடுத்த மேற்படி நீ.சா.ஆ.1 மற்றும் நீ.சா.ஆ.2 ஆவணம் காசோலைகளை திருப்பி தருமாறு கோரி தான் காவல் நிலையத்தில் தரப்பட்டது என்றால் இரு தரப்பையும் அழைத்து விசாரணை செய்தார்கள். எதிரி காவல் நிலையத்தில் புகார் தந்த பின்பு தான் எதிரி மீது வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான். பொதுவாக பணம் ரூ.1,00,000/– த்திற்கு மேல் பணம் தரவேண்டும் என்றால் வங்கி மூலுமாக தான் பரிவர்த்தனை செய்யவேண்டும் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் கூறுவது போல் உண்மையாகவே எதிரி பணம் தரவேண்டி இருந்தால் அதற்குண்டான ஆவணத்தை எதிரியிடமிருந்து வாங்கி இவ்வழக்கில் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. எதிரி காவல் நிலையத்தில் என் மீது புகார் தந்த பின்பு தான் எதிரி ஏற்கெனவே கொடுத்திருந்த காசோலையை வைத்து பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கூறுவது போல் Loan confirmation Deed கொடுத்திருந்தால் அதை இவ்வழக்கில் தாக்கல் செய்திருப்பேன் அவ்வாறு ஆவணம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. எனக்கு கந்துவட்டிக்கு பணம் தருவது தான் தொழில் என்றும் அதன்

அடிப்படையில் இந்நீதிமன்றத்தில் பல வழக்குகள் தாக்கல் செய்துள்ளதாகவும், கந்துவட்டிக்காக தான் எதிரிக்கு பணம் கொடுத்தேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கானது தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

MAHASAKTHI K

Digitally signed by MAHASAKTHI K